Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2024** |
| Deposition of witness for | :: | **PW. 6** |
| Name | :: | **அழகுமுருகன்** |
| Father's Name | :: | **பதினெட்டாம்படி** |
| V illage | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**11.08.2026**
**அரசு தரப்பில் முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா திருமலைபுரத்தில் குடியிருந்து வருகிறேன். டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை கடந்த கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு க.விலக்கில் உள்ள எனது கடையில் நான் இருந்தபோது மாலை 07.00 மணியளவில் ரெட்டியபட்டி காவல் நிலைய போலீசார் அங்கு வந்து எனதுகடை முன்பு சண்டை நடந்ததாக எழுதி இருக்கிறோம் கையொப்பம் செய்யுமாறு கேட்டதன் பேரில் நான் கையொப்பம் செய்தேன். என்முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை. **( பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ .2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 21.12.2023ம் தேதி இரவு 22.00 மணியளவில் க.விலக்கு – கமுதி செல்லும் தார் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள சந்தனம் என்பவரது உணவகம் அருகே நானும் எங்கள் ஊரை சேர்ந்த பொன்னுச்சாமி மகன் பதினெட்டாம்படி என்பவரும் பேசி கொண்டிருந்தபோது ரெட்டியபட்டி காவல் நிலைய போலீசார் குற்ற எண். 133/2023 வழக்கில் சண்டை நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த ஆவணத்தில் நானும், பதினெட்டாம்படியும் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 83/2024** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| **Name** | :: | **செந்தூரன்** |
| Father's Name | :: | **வழிவிட்டான்** |
| V illage | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**11.08.2026**
**அரசு தரப்பில் முதல் விசாரணை**:

1. நான் அருப்புக்கோட்டை தாலுகா இராணிசேதுபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ எனக்கு தெரியும் அவர் எனது கடையில் வாடகைக்கு இருக்கிறார், ஆஜர் எதிரியை தெரியும் அவர் எனது பக்கத்து ஊர்க்காரர் ஆவார். இருவருக்குள்ளும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

1. கடந்த 21.12.2023 ம் தேதி மாலை சுமார் 03.30 மணியளவில் நான் க.விலக்கு – கமுதி சாலையில் உள்ள ஆறுமுகம் என்பவரது உணவகத்தில் உட்கார்ந்து ஆறுமுகம் என்பவரிடம் பேசி கொண்டிருந்த போது, அங்கு வந்த இவ்வழக்கின் எதிரி குருசாமி என்பவர் ஆறுமுகம் கடைக்கு பக்கத்து கடையில் டூவீலர் ஒர்க் ஷாப் வைத்திருக்கும் பாண்டியனை பார்த்து ஏண்டா தேவிடியா புண்டை மகனே, எதுக்

கெடுத்தாலும் இங்கேயே வந்து வந்து சந்தனத்துக் கடையில் வந்து இருக்குற தேவிடியா மகனே, இனிமேல் நீ சந்தனம் கடைப்பக்கம் வரக்கூடாது என்று சொல்லியதையும், கடைக்கு வெளியே கிடந்த ஒரு கருவேலங்கட்டையை எடுத்து பாண்டியன் பின்பக்க தலையில் அடித்ததையும், மறுபடியும் அந்தக் கட்டையை வச்சு பாண்டியனை அடிக்க முயற்சித்த போது பாண்டியன் அதை தடுக்க, அவரது இடது முன்கையில் அடிபட்டு வீக்க காயம் ஏற்பட்டதையும், அப்போது அங்கிருந்தவர்கள் சண்டையை விலக்கி விட்டதையும், உடனே குருசாமி, பாண்டியனை பார்த்து இன்னைக்கு தப்பிச்சிட்ட இனிமேல் உன்ன இந்தப்பக்கம் பார்த்தேன் கொன்று புதைச்சுடுவேன் என்று கையில் வைத்திருந்த கட்டையை காட்டி கொலை மிரட்டல் விடுத்த சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு, என்னுடைய வாக்குமூலத்தில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**